

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 11.03.2025 | தஞ்சாவூர் மத்திய | திருவையாறு | திருவையாறு தேரடி திடல், திருவையாறு | செந்தில் வேல், கபில் சாய் |
| 2 | 11.03.2025 | தூத்துக்குடி வடக்கு | கோவில்பட்டி | இலுப்பை ஊராணி ஊராட்சி | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, உமா ராணி |
| 3 | 11.03.2025 | சேலம் மத்திய | ஓமலூர் | கே.மோரூர், காடையாம்பட்டி | சௌமியன் வைத்தியநாதன், ச.அஜீத்குமார் |
| 4 | 11.03.2025 | தருமபுரி மேற்கு | அரூர் | ரவுண்டானா, கச்சேரிமேடு, அரூர் | இந்திரகுமார் தேரடி, ரா.கிருத்திகா |
| 5 | 11.03.2025 | விருதுநகர் தெற்கு | இராஜபாளையம் | நான்கு முக்கு மலையடிப்பட்டி, ராஜபாளையம். | ராஜகம்பீரன் அப்பாஸ், மு.பிரித்திவி ராணி |
| 6 | 13.03.2025 | தருமபுரி மேற்கு | பாலக்கோடு | இராமசாமி கோயில் அருகில், மொரப்பூர் பிரதான சாலை, காரிமங்கலம் | **கம்பம் செல்வேந்திரன்,** மு.கபில் |
| 7 | 13.03.2025 | தஞ்சாவூர் மத்திய | தஞ்சாவூர் | தலைமை தபால் நிலையம், ரயிலடி அருகில், தஞ்சாவூர் | **முனைவர் இரா.தி.சபாபதி மோகன்,** சி.பா.சின்மகி |
| 8 | 13.03.2025 | பெரம்பலூர் | பெரம்பலூர் | தேரடித் தெரு | வே.மதிமாறன், காருண்யா |
| 9 | 13.03.2025 | விருதுநகர் தெற்கு | திருவில்லிபுத்தூர் | பெரிய மாரியம்மன் கோவில் பின்புறம், திருவில்லிப்புத்தூர். | பேராசிரியர்.கான்ஸ்டன்டைன் ரவீந்தரன், வா.சந்தான லட்சுமி |
| 10 | 13.03.2025 | வேலூர் | காட்பாடி | சித்தூர் பேருந்து நிலையம் அருகில், காட்பாடி | **பேராசிரியர்.சுப.வீரபாண்டியன்,** ம.ஜ.சந்தீப் |
| 11 | 13.03.2025 | திருப்பூர் தெற்கு | மடத்துக்குளம் | தேவனூர்புதூர் | மதுரை எஸ்.பாலா, பிரபு |
| 12 | 14.03.2025 | பெரம்பலூர் | குன்னம் | குன்னம் பேருந்து நிலையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, ராமமூர்த்தி |
| 13 | 14.03.2025 | தஞ்சாவூர் தெற்கு | பேராவூரணி | திருச்சிற்றம்பலம் கடைவீதி, பேராவூரணி | வே.மதிமாறன், வியானி விஷ்வா |
| 14 | 14.03.2025 | விழுப்புரம் வடக்கு | மயிலம் | மயிலம் | ராஜகம்பீரன் அப்பாஸ், அப்துல் வஹாப் அதாயி |
| 15 | 14.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி மாநகரம் | சி.ரா.அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில், திருத்தங்கல் | **கம்பம் செல்வேந்திரன்,** செ.முகம்மது அன்ஸார் |
| 16 | 15/03/2025 | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் | பெரியார் நகர், சென்னை –19 | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, செல்வமணி |
| 17 | 15.03.2025 | சென்னை தெற்கு | சோழிங்கநல்லூர் | நஞ்சுண்டார் சாலை, ஈஞ்சம்பாக்கம் கடற்கரை, மீனவர் பகுதி | மருத்துவர் யாழினி, க.ஹேமநாதன் |
| 18 | 15.03.2025 | நாமக்கல் கிழக்கு | இராசிபுரம் | பழைய பேருந்து நிலையம், இராசிபுரம் | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ம.மோகநிதி |
| 19 | 15.03.2025 | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி | நால்ரோடு சந்திப்பு, மொடக்குறிச்சி | **முனைவர் இரா.தி.சபாபதி மோகன்,** மு.கௌரிமனோகரி |
| 20 | 15.03.2025 | புதுக்கோட்டை தெற்கு | ஆலங்குடி | காந்தி பூங்கா அருகில், ஆலங்குடி. | வே.மதிமாறன், இரா.பிரீத்தி |
| 21 | 15.03.2025 | திருவள்ளூர் மேற்கு | திருவள்ளூர் | இரயில் நிலையம் | மில்டன், க.ரா.சந்தியா |
| 22 | 15.03.2025 | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | அண்ணா சிலை அருகில், ஆம்பூர் பேரூர் | துரை.சம்பத், வி.ஜாஸ்மின் சுவேதா |
| 23 | 15.03.2025 | நீலகிரி | உதகை | ஏ.டி.சி.சுதந்திர திடல் முன்பு, உதகை | ராஜகம்பீரன் அப்பாஸ், தஸ்லீமா நஸ்ரின் |
| 24 | 15.03.2025 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | விஜயா திரையரங்கம் அருகில், மயிலாடுதுறை | இந்திரகுமார் தேரடி, சூர்யா |
| 25 | 15.03.2025 | விருதுநகர் வடக்கு | திருச்சுழி | கலைஞர் திடல், காரியாபட்டி | **திருச்சி சிவா எம்.பி.,** ஹ.ஹம்மத் நிஸ்ரின் |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 09–03–2025.

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது நெல்லை பேராசிரியை தேர்வு "எனது ஆண்கள்" என்ற மலையாள நூலை தமிழில் மொழி பெயர்த்ததற்காக நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள தூய சவேரியார் கல்லூரியின் தமிழ்த் துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வரும் விமலா சாகித்திய அகாடமி விருதுக்கு தேர்வாகி யுள்ளார்.அவருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் விமலாவை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் கல்லூரிக்கு நேரில் சென்று சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் கல்லூரி முதல்வர் கார்பின் ரூப்ஸ், தமிழ் துறை தலைவர் பேராசிரியர் இருதயராஜ், வழக்கறிஞர் ஏ.எல். பி.தினேஷ் ஆகியோர் உள்ளனர்.

### மெட்ரோ ரயில் திட்டம்:

## போரூர் - பூந்தமல்லி வரை உயர்மட்ட பாதையில் கட்டுமானப் பணி நிறைவு!

சென்னை, மார்ச் 11–

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி வரையிலான 4வது வழித்தடத்தில் போரூர் – பூந்தமல்லி வரையிலான உயர்மட்டப் பாதையில், கடைசி பாலத்தின் கட்டுமானப்பணி வெற்றிகரமாக நிறைவடைந்தது.

சென்னையில் இரண்டாம்கட்ட மெட்ரோ ரயில் திட்டம், 116.1 கி.மீ. தொலை வுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி பைபாஸ் வரையிலான 4வது வழித்தடத்தில் கலங்கரை விளக்கம் முதல் கோடம்பாக்கம் மேம்பாலம் வரை சுரங்கப்பாதையாகவும், கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் முதல் பூந்தமல்லி பைபாஸ் வரை உயர்மட்டப் பாதையாகவும் அமைகிறது.

9 சுரங்க மெட்ரோ ரயில் நிலையங்களும், 18 உயர்மட்ட மெட்ரோ ரயில் நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன. தற்போது, பல்வேறு இடங்களில் சுரங்கப்பாதை, உயர்மட்டப் பாதை பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

குறிப்பாக, பூந்தமல்லி – போரூர் இடையே பல இடங்களில் தண்டவாளம் அமைக்கும் பணி, பொறியியல் கட்டுமானப்பணி ஆகியவை முழுவீச்சில் நடைபெறுகின்றன. இந்த வழித்தடத்தில் ஒரு பகுதியான போரூர் – பூந்தமல்லி வரை உயர்மட்டப் பாதையில் கடைசி பாலத்தின் கட்டுமானப்பணி நிறைவடைந்தது.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி தலைமையில், சேவியர் காலனி மற்றும் முதலியார்விளை பகுதியில் உள்ள மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு தையல் இயந்திரம் மற்றும் மளிகை பொருட்கள் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் ஏ.பாபு வினிபிரட், ஐ.கேட்சன், இ.ஜவகர், எம்.மதியழகன், ஆர். சதாசிவன், எம்.ராஜன், பி.வேல்முருகன், ச.சோபி, நெ.கலாராணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.